பக்கங்கள்:-23

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | மார்கழி 14 | சனிக்கிழமை | 30.12.2023 | அதிர்வு 151

### ஹயஸ் - ஓட்டோ மோதி விபத்து

## 4 வயது சிறுவன் பரிதாப மரணம்!

ஹயஸ் வாகனமும் ஓட்டோவும் நேருக்கு நேர் மோதி இடம்பெற்ற விபத்தில் சிறுவன் ஒருவர் பலியாகியுள்ளார். அத்து டன் இருவர் 06

## பொது வேட்பாளராகக் கஜேந்திரகுமார் களமிறங்க வேண்டும் என்கிறார் விக்கி

### தேர்தல் புறக்கணிப்பு சாத்தியமற்றதாம்



"வடக்கு, கிழக்கை இராணுவத்தினர் கட்டுப் பாட்டில் வைத்துள்ள னர். இவ்வாறான ஒரு பின்னணியில் ஜனாதி பதித் தேர்தலைப் புறக் கணிப்பது நடைமுறைச் சாத்தியமற்றது. கஜேந் திரகுமார் போன்ற மும் மொழி 07

## கொரோனாவால் மேலும் ஒருவர் பலி



அனுராதபுரம் போதனா வைத்தியசா லையில் சிகிச்சை பெற்று வந்த பெண் ணொருவர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான நிலையில் 07

# விக்னேஸ்வரனைப் போல் நேரத்துக்கு நேரம் கொள்கையை மாற்றுபவர்கள் நாம் அல்லர்!

## ஒரே பாதையில் தமிழரசுக் கட்சி தொடர்ந்தும் பயணிக்கும் எனச் சாணக்கியன் எம்.பி. உறுதி

(எஸ்.நிதர்ஷன்)

"விக்னேஸ்வரனைப் போல் மூன்று மாதங்க ளுக்கு ஒருமுறை கொள் கையை மாற்றுபவர்கள் நாம் அல்லர். நாம் மக்க ளுக்காக ஒரே பாதையில் தொடர்ந்தும் பயணிப் போம்."

-இவ்வாறு இலங் கைத் தமிழரசுக் கட் சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமா ணிக்கம் சாணக்கியன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமை யத்தில் நேற்று நடை பெற்ற செய்தியாளர் சந் திப்பில் கருத்துத் தெரி விக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறி னார். 06




## தமிழரசுக் கட்சியின் மாநாட்டை ஒத்திவைக்கும் திட்டம் இல்லை

### யாழில் சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

"இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாநாடு திட்டமிட்டபடி நடைபெறும். தற்போது வரை அதில் எந்த மாற்றமும் இல்லை. எங்களுடைய மனங்களில் மாநாட்டை ஒத்திவைக்கின்ற எண்ணம் இல்லை."

- இவ்வாறு இலங்கைத் தமிழர சுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராச மாணிக்கம் சாணக்கியன் தெரிவித் தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் 07



இன்று ஒரு செய்தி யைப் பார்த்தபோது 'பரத் எனும் நான்' என்ற தலைப்பில் தமிழ் டப் பிங்கில் வெளியான தெலுங்குப் படம் நினை வுக்கு வந்தது. கதாநா யகன் மகேஷ்பாபு. படத் தில் ஒக்ஸ்போர்ட் பட்ட தாரி. மாநில முதலமைச்சரான தகப்பன் திடீரென உயிரிழந்தமையால் நாடு திரும்ப, அவர் முதலமைச்சராக்கப்படுகின்றார்.

மாநிலத்தில் வீதிப் போக்குவரத்து ஒழுங்கு முறை, வாகனம் செலுத்துபவர்களின் 06



# சஜித்துக்குச் சவாலாக இருக்கமாட்டார் ரணில்

## ஐக்கிய மக்கள் சக்தி கூறுகின்றது

**அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்கு ரணில் விக்கிரமசிங்க எந்த விதத்திலும் சவாலாக இருக்கமாட்டார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரான திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. தெரிவித்தார்.**

**விமல் வீரவன்ஸ தலைமையிலான உத்தர லங்கா சபாயக என்ற அரசியல் கூட்டணியை தமது கூட்டணியுடன் இணைத்துக்கொள்வது தொடர்பில் இன்னும் பேச்சு நடத்தப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

“கூட்டணியில் இணைத்துக்கொள்ள வேண்டிய தரப்புகள் தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரம் கட்சித் தலைமைக்கு வழங்கப்பட்டுள்ளது. எனினும், உத்தர லங்கா சபாகயவுடன் பேச்சு நடத்தப்படவில்லை.

கூட்டணி அமைக்கும்போது நாம் விழிப்பாகவே இருப்போம். ஏனெனில் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களை இணைக்க முடியாது. ஊழல், மோசடிகள் பற்றியும் கவனம் செலுத்த வேண்டும்.

எது எப்படி இருந்தாலும் தனி நபர்கள் மற்றும் குழுக்கள் தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரம் கட்சித் தலைவருக்கே உள்ளது.

எமது கொள்கையுடன் இணைந்து பயணிக்கக் கூடியவர்களே இணைத்துக்கொள்ளப்படுவார்கள். ஏனெனில் நாட்டைக் கட்டியெழுப்பப் புரிந்துணர்வு என்பது அவசியம்.

சஜித் பிரேமதாஸதான் ஐக்கிய மக்கள் சக்தி – கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர். இதில் மாற்றம் இல்லை. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க எந்த விதத்திலும் சவாலாக இருக்கமாட்டார்.” – என்றார்.

# முகநூலில் பெண் போல நடித்து நம்ப வைத்து நேரில் அழைத்துக் கொள்ளையிட்டார்களாம்!

## நெல்லியடியில் நேற்று இருவர் கைது

முகநூலில் பெண் போல பேசி ஏமாற்றி நபரொருவரிடம் கொள்ளையில் ஈடுபட்ட இருவர் நேற்று நெல்லியடிப் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை பிராந்தியக் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரால் யாழ்ப்பாணம் – நெல்லியடியைச் சேர்ந்த இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

திருகோணமலையைச் சேர்ந்த ஒருவருக்கு நெல்லியடியைச் சேர்ந்த ஒருவர் பெண் போல பழகி காதல் வலையில் வீழ்த்தி நெல்லியடிக்கு வரவழைத்துள்ளார்.

இதனை நம்பி நெல்லியடிக்கு வந்த திருகோணமலைவாசியைக் கத்தி முனையில் அச்சுறுத்திப் பணம், உடைமைகள் என்பன இருவரால் கொள்ளையடிக்கப்பட்டன.

சம்பவம் தொடர்பாக திருகோணமலைவாசி நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவு செய்தார்.




விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் இருவரையும் கைது செய்தமையுடன் கொள்ளையடித்துச் செல்லப்பட்ட பணம் மற்றும் உடமைகளையும் மீட்டனர்.

சந்தேக நபர்கள் இருவரிடம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்ற நிலையில் பருத்தித்துறை நீதுவான் நீதிமன்றத்தில் அவர்களை முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.


Build Your Dream Home with us....
NORTH WALL
ENGINEERING
"Experience a professional service like no other"
Our Services:
- Architectural Designing
- Structural Planning
- 2D & 3D Drawing
- BOQ Assessment
- Interior Designing
- Landscaping

For Quotations Contact us on
0777 818 208 / 0774 002 766
Nelliyady, Jaffna.

# இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்
# இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம்
# இணைந்து



## "தாயகஒலி" பிரதம ஆசிரியர்

***தம்பு சிவா அவர்களின் (தம்பு.சிவசுப்பிரமணியம்)***

## (அகவை 80) அமுத விழாவை முன்னிட்டு

நடத்தும்

# சிறுகதைப் போட்டி

**இருபிரிவுகளாக நடத்தப்படும்**

**(பரிசுத் தொகை 1 இலட்சம்)**

1. சிறுகதைப் போட்டி சகலருக்குமானது
2. பாடசாலை மாணவர்களுக்கான திறந்த போட்டி

* போட்டிக்கான படைப்புகள் அனைத்தும் சொந்தப்படைப்பாக அமைய வேண்டும். ஏற்கனவே வெளிவந்தபடைப்புக்கள் ஏற்றுக்கொள்ள படமாட்டாது.
* பாடசாலை மாணவர்களுக்கான ஆக்கப்படைப்புகள் யாவும் அப் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
* 2024ம் ஆண்டு பெப்ரவரி 15ஆம் (15.02.2024) திகதிக்கு முன் படைப்புகளை அனுப்பி வைக்க வேண்டப்படுகின்றீர்கள்.
* **நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.**

***அனுப்ப வேண்டிய முகவரி :***
இணைப்பாளர்
இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்
இல. 9 - 2/1 நெல்சன் பிளேஸ்
கொழும்பு 06.
தொடர்புகளுக்கு 0771 877 999, 011 2364124



# இருதரப்பு நட்புறவையும் ஒத்துழைப்பையும் வலுப்படுத்த மீண்டும் ஒரு தடவை வாய்ப்பு

## இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா பிரதமரிடம் தெரிவிப்பு

**“இந்திய - இலங்கை இருதரப்பு நட்புறவையும் ஒத்துழைப்பையும் மேலும் வலுப்படுத்துவதற்காக மீண்டும் ஒருமுறை வாய்ப்புக் கிடைத்துள்ளது. இலங்கையின் நலனுக்காக நாட்டின் தலைவர்களின் வழிகாட்டுதலின்படி இலங்கை மக்களுடன் இணைந்து செயற்படவுள்ளேன்.”**

**- இவ்வாறு இலங்கைக்கான புதிய இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.**



பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் புதிய இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று அலரிமாளிகையில் இடம்பெற்றது.

இதன்போது இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவுகள் மற்றும் ஒத்துழைப்பு குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன் உத்தேச கூட்டுத் திட்டங்களை விரைவுப்படுத்துவதற்கான வழி வகைகள் குறித்தும் ஆராயப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் சூரியசக்தி மற்றும் காற்றாலை மின்சாரம் உள்ளிட்ட எரிசக்தி துறையில் இந்திய முதலீடுகளை அதிகரிப்பதற்கான ஏற்பாடுகள், திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகள், துறைமுகம், ரயில் பாதைகள் தொடர்பான கூட்டுத் திட்டங்கள் மற்றும் விவசாயம் மற்றும் கடற்றொழில் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குவது தொடர்பிலும் அதிகம் கவனம் செலுத்தப்பட்டது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள கடன் மறுசீரமைப்பு வசதிகளை விரிவுப்படுத்தி நிவாரணப் பொருள்கள், உணவு மற்றும் மருந்துகளை வழங்குவதன் மூலம் இலங்கைக்கு வழங்கிய ஆதரவுக்கு பிரதமர் நன்றி தெரிவித்துள்ளார்.

புதிய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, 2007 முதல் 2010 வரை இலங்கையில் சேவையாற்றிய காலத்தை நினைவு கூர்ந்தமையுடன் இருதரப்பு நட்புறவையும் ஒத்துழைப்பையும் மேலும் வலுப்படுத்துவதற்காக மீண்டும் ஒருமுறை கொழும்புக்கு விஜயம் செய்யக்கிடைத்தமையை பெரும் பாக்கியமாக கருதுகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

இலங்கையின் நலனுக்காக நாட்டின் தலைவர்களின் வழிகாட்டுதலின்படி இலங்கை மக்களுடன் இணைந்து செயற்படுவதும் இருநாடுகளின் தலைவர்களும் ஒப்புக் கொண்டனர். இந்திய – இலங்கை ஒத்துழைப்பின் தொலைநோக்குப் பார்வை மற்றும் அதன் 14 அம்ச வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வது தனது பணியாகும் என இந்திய உயர்ஸ்தானிகர் மேலும் தெரிவித்துள்ளார்.



# வரித் திருத்தத்தால் மாதாந்தச் செலவு அதிகரிக்கும் என்ற கருத்து தவறானது

## நிதி அமைச்சின் வரிக் கொள்கை ஆலோசகர் தகவல்



பெறுமதி சேர் வரி உள்வாங்கப்பட்டுள்ள பொருள்கள் மற்றும் சேவைகள் மீது விதிக்கப்பட்டுள்ள ஏனைய வரிகளை நீக்கி, உரிய வரி மாற்றங்களைச் செய்து, வற் திருத்தத்தின் தாக்கத்தைக் குறைப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது என நிதி அமைச்சின் வரிக் கொள்கை ஆலோசகர் தனுஜா பெரேரா தெரிவித்துள்ளார்.

"பெறுமதி சேர் வரி திருத்தச் சட்டம் மற்றும் அதன் தாக்கம்" என்ற தலைப்பில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே நிதி அமைச்சின் வரிக் கொள்கை ஆலோசகர் தனுஜா பெரேரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் வற் விதிக்கப்பட்டுள்ளது. அதன்படி அது இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டு சுமார் 20 வருடங்கள் கடந்துள்ளன. ஆரம்ப கட்டத்தில், வற் இரண்டு வீதமாக இருந்தது. ஆனால் பின்னர் அது மூன்று வீதமாகத் திருத்தப்பட்டது. இவ்வகையில், அவ்வப்போது வெவ்வேறு மதிப்புகளில் இருந்த இந்த வற் வரி வீதம், 2019 இல் செய்யப்பட்ட வரித் திருத்தங்களால் 8 வீதமாக குறைக்கப்பட்டது. இதனால் அரச வருமானம் பெருமளவு குறைந்துள்ளது. பின்னர் அது 15 வீதமாக உயர்த்தப்பட்டது.

கடந்த மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வற் வரி திருத்தச் சட்டம் மூலம், 2024 ஜனவரி 01 முதல் வற் விகிதத்தை 15 வீதத்திலிருந்து 18 வீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இனிமேலும் எம்மால் சலுகைகளை அடிப்படையாக கொண்டு முன்னோக்கிச் செல்வது கடினம். அரச வருமானத்தை அதிகரிக்கும் அத்தியாவசியமான காரணத்தினால் இந்த வரித் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்பதைக் கூற வேண்டும். இதற்குத் தேவையான பல்வேறு வரித் திருத்தங்கள் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2019 ஆம் ஆண்டாகும்போது வற் வரிக்காக பதிவு செய்யப்படும் எல்லை ரூ 15 மில்லியனாக காணப்பட்டது. ஆனால் 2020 ஜனவரி 01 முதல் அந்த எல்லை ரூ. 300 மில்லியனாக உயர்த்தப்பட்டது. அதன் மூலம் வற் வரிக்கு பதிவு செய்யப்பட்டிருந்த ஏராளமான வரிக் கோப்புகள் செயலிழந்தன. ஆனால் பின்னர் அது ரூ. 80 மில்லியனாகக் குறைக்கப்பட்டது. புதிய திருத்தத்தின்படி 2024 ஜனவரி 01 முதல் 60 மில்லியன் ரூபாவாக மேலும் குறைக்கப்பட்டுள்ளது.

மேலும், ஏராளமான வரி விலக்குகளை நீக்க புதிய திருத்தத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. அரசாங்கம் இழந்த பெரும் வருமானத்தை மீட்பதே இதன் நோக்கமாகும்.

ஆனால் சிலர் இந்த நடவடிக்கை குறித்து தவறான கருத்துக்களை சமூகமயமாக்கி வருகின்றனர். ஜனவரி முதலாம் திகதி முதல் வாழ்வது கடினம் என்றும், வரித் திருத்தத்தால் ஒரு குடும்பம் பெரும் செலவைச் சுமக்க நேரிடும் என்றும் சிலர் கூறுகின்றனர். வரித் திருத்தம் காரணமாக சில மேலதிக செலவுகள் ஏற்படும் என்றாலும், சிலர் கூறும் அளவுக்கு அது அதிகமானதாக இருக்க மாட்டாது என்பதையும் தெரிவிக்க வேண்டும். மேலும், பெறுமதி சேர் வரி உள்வாங்கப்பட்டுள்ள பொருள்கள் மற்றும் சேவைகள் மீது விதிக்கப்பட்டுள்ள ஏனைய வரிகளை நீக்கி, உரிய வரித் திருத்தங்களை செய்து மக்களுக்கு நிவாரணம் வழங்கத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் ஏற்கனவே எடுத்து வருகிறது." – என்றார்.

# ஊடகவியலாளர் தில்லையை வாழ்த்திய சாணக்கியன் எம்.பி.



இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இணைந்து நடத்திய சிறந்த ஊடகவியலாளர்களுக்கான விருது வழங்கும் விழாவில் 'வாழ்நாள் சாதனையாளர் விருது' வழங்கிக் கௌரவிக்கப்பட்ட யாழ். வடமராட்சியின் மூத்த ஊடகவியலாளர் சின்னத்துரை தில்லைநாதனை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் நேரில் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்ததுடன் அவருக்குப் பொன்னாடையும் போர்த்திக் கௌரவித்தார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொறுப்பற்ற போக்கு போன்றவற்றைப் பார்த்து மலைக்கும் அவர், உடனடியாக நிலைமையை ஒழுங்குக்குள் கொண்டு வருவதற்காக ஒரே நாளில் அதிரடியாக சில சட்ட ஒழுங்கு விதிகளை அறிவிக்கின்றார்.

போக்குவரத்து விதி மீறல்களுக்கு நூறு, இருநூறு, ஐந்நூறு ரூபாவாக இருந்த தண்டங்களை எல்லாம் ஒரேயடியாக 10 ஆயிரம், 20 ஆயிரம், 25 ஆயிரம் ரூபா என்று உயர்த்துகின்றார்.

சில வருடங்களுக்கு முன்னர் அந்தச் சினிமாவைப் பார்த்தபோது இதெல்லாம் யதார்த்தத்தில் சாத்தியமா என்று எனக்குள் ஒரு கேள்வி எழுந்தது.

இலங்கையில் இப்போது ஓர் ஒழுங்கு விதி அறிமுகப்படுத்தப்படவிருப்பது குறித்து அறியும்போது அந்தப் படத்தில் முதல்வர் மகேஷ்பாபு அறிவித்த தண்டங்கள் கூட சாத்தியம்தான் என்று தோன்றுகின்றது.

ரயிலில் டிக்கெட்டின்றி ஓஸியில் பயணம் செய்வோருக்கான தண்டம் பத்தாயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றமையைப் பார்த்தபோதுதான் 'பரத் எனும் நான்' படத்தின் நினைவு எனக்கு வந்தது.

இலங்கை ரயில்களில் பயணிப்போரில் நான்கு பேரில் ஒருவர் – அதாவது கால்வாசிப் பேர் – ஓஸிப் பயணிகளாம்...!

'வித்தவுட்'டில் பயணிக்கும் பயணிகளால் ரயில்வேத் திணைக்களத்துக்கு தினசரி சராசரியாக 3 கோடி ரூபா நஷ்டமாம். அதாவது வருடத்திற்கு 1100 கோடி ரூபா இழப்பு. அதை இல்லாமல் செய்வதற்காகத்தான் இந்தப் பத்தாயிரம் ரூபா தண்டப்பணம் திட்டம் என்கிறார்கள். எனக்கென்னவோ இது சரிப்பட்டு வரும் விடயமாகத் தெரியவில்லை. தண்டப்பணம் செலுத்தாத காரணத்தினால் சிறைக்குச் செல்வோரின் எண்ணிக்கைதான் ஏறும்.

ஏற்கனவே பொலிஸாரின் தற்போதைய சுற்றிவளைப்பு, கைது நடவடிக்கைகளால் சிறைகள் எல்லை மீறி நிரம்பி வழிகின்றன. இலங்கைச் சிறைகள் கொள்ளளவை விட இரண்டு மடங்கு மேலதிகமான கைதிகளைக் கொண்டிருக்கின்றன. அதனால் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றன. அரச கட்டடங்களைப் புதிய சிறைச்சாலைகளாக மாற்றுவது குறித்து அரசு அவசர அவசரமாகப் பரிசீலித்து வருவதாகவும் கூறப்படுகின்றது. இந்தச் சமயத்தில் இப்படி ரயிலில் வித்தவுட் பயணிகளுக்கான அபராதத்தை பத்தாயிரம் ரூபாவாக உயர்த்துவது சிறைச்சாலைகளைத்தான் பெரிதும் நெருக்கடிக்குள் ஆழ்த்தும் என்று நான் நினைக்கிறேன்.

\+ + +

நீண்ட காலமாக நடக்காமல் இழுபடும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டை எப்படியும் ஒப்பேற்றிவிட கட்சியின் முக்கியஸ்தர்கள் பகீரதப் பிரயோசனம் பண்ணினாலும், சில தரப்புகள் அதற்கு முடக்கு போடுவதில் தொடர்ந்தும் கண்ணாயிருக்கிறன என்று கூறப்படுகிறது.

இப்போது சம்பந்தன் ஐயாவின் பெயரில் காய்கள் நகர்த்தப்படுகின்றன. இதில் அரசியல் செய்பவர் சம்பந்தன் ஐயா என்பதை விட அவரின் மகன்தான் என்கின்றன விடயம் அறிந்த வட்டாரங்கள்.

அத்தோடு கதிரையை விட விருப்பமில்லாதவரின் நடிப்பு. சிவாஜி கணேசன் தோற்றுப் போய்விடுவார் போங்கள்...!

பல உள்வீட்டு விடயங்களை விவரமாக எழுத வேண்டிய சூழல் வந்துள்ளது. அடுத்து வரும் நாள்களில் எதிர்பாருங்கள்.

\+ + +

நமது 'கருப்பு எம்.ஜி.ஆர்.' விஜயகாந்துடனான ஊடாட்டம் – அனுபவம் – குறித்து வரும் நாள்களில் எழுதுவேன் என்று நேற்றுக் குறிப்பிட்டிருந்தேன். அதுவும் விரைவில் வரும்.

## 4 வயது சிறுவன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

படுகாயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கம்பஹா மாவட்டம், மீரிகமை பிரதேசத்தில் நேற்று இரவு 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

ஓட்டோவில் பயணித்த நீர்கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு வயது சிறுவனே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். அவருடன் பயணித்த 38 வயதுடைய தந்தையும், 47 வயதுடைய ஓட்டோ சாரதியும் படுகாயங்களுடன் மீரிகமை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

27 வயதுடைய ஹயஸ் வாகனத்தின் சாரதியைக் கைது செய்துள்ள பொலிஸார், விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## விக்னேஸ்வரனைப் போல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரான சி.வி.விக்னேஸ்வரன் எம்.பி., ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான அண்மைய சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை. இருப்பினும் அவரைப் போல் நாம் நேரத்துக்கு நேரம் – மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கொள்கையை மாற்றுபவர்கள் கிடையாது. எடுத்த முடிவில் எமது கட்சி இறுதி வரைச் செயற்படும்.

இதேவேளை, தமிழர்களுக்குத் தீர்வு வழங்குவேன் என்று தொடர்ச்சியாகக் கூறி வருகின்ற ரணில் விக்கிரமசிங்க, கடந்த மார்ச் மாதம் தீர்வுத் திட்டத்தை முன்வைப்பேன் என்றும் பொய்யுரைத்திருந்தார். இவ்வாறான நிலையில் பல ஏமாற்றங்கள் இருந்தாலும் ஜனாதிபதியுடனான சந்திப்புக்களில் நாம் கலந்து கொள்கின்றோம். இதன் காரணமாக கிழக்கு மாகாணத்தில் பல விடயங்களை என்னால் முன்னெடுக்க முடிகின்றது."

– என்றார்.




"இமாலயப் பிரகடனம்" குறித்து விளக்கம் அளிப்பதற்காக "உலகத் தமிழர் பேரவை" அமைப்பின் பேச்சாளர் திரு சுரேன் சுரேந்திரன் இணையவழியிலான பொதுக்கூட்டத்தில் மீண்டும் கலந்து கொள்ளுகிறார். இப்பொதுக்கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை 30/12/2023 அன்று ரொறொன்ரோ நேரப்படி காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகும். இலண்டன் நேரம் மாலை 3.00 மணியாகும். ஐரோப்பிய நேரம் மாலை 4.00 மணியாகும். இலங்கை நேரம் மாலை மாலை 8.30 மணியாகும். உங்கள் கேள்விகளை எழுத்து மூலம் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில் முன்வைக்கலாம்.

இணைய வேண்டிய தொடர்பு : https://us02web.zoom.us/j/88950132326 Meeting ID: 889 5013 2326

## பொது வேட்பாளராகக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

புலமைமிக்கவர் பொது வேட்பாளராகக் களமிறங்க வேண்டும். தேர்தலில் அவர் போட்டியிட்டால் அவருக்கே எனது வாக்கு."

– இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் எம்.பி. தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலைத் தமிழ் மக்கள் புறக்கணிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. வலியுறுத்தியிருந்தார். இது தொடர்பில் செய்தியாளர்களின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே விக்னேஸ்வரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வழமை போன்று கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கருத்து நடைமுறைக்குச் சாத்தியமற்றது. தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் தேர்தல் புறக்கணிப்பைக் கண்காணித்து வழிநடத்தியிருப்பார்கள். எனினும், தற்போது வடக்கு – கிழக்கை இராணுவத்தினர் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். இவ்வாறான ஒரு பின்னணியில் கஜேந்திரகுமார் எவ்வாறு தேர்தல் புறக்கணிப்பை வெற்றிகரமாக அமுல்படுத்துவார்?

மேலும், சிங்கள தேசிய கட்சிகளுக்கு ஆதரவான உள்ளூர் கட்சிகள் இயங்கி வருகின்றன. இவ்வாறான ஒரு பின்னணியில் எவ்வாறு கஜேந்திரகுமார் சிங்கள வேட்பாளர் ஒருவரைப் புறக்கணிக்குமாறு கோர முடியும்?

கடந்த பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வாக்குகள் எண்ணப்பட்ட போது பல்வேறு குளறுபடிகள் நடந்தன என்று குற்றம் சுமத்தப்பட்டது. இவ்வாறான ஒரு பின்னணியில் ஜனாதிபதித் தேர்தலைப் பொதுமக்கள் நிராகரித்தால் என்ன நடக்கும்? வாக்காளர்கள் வீட்டில் இருக்கும்போது அவர்களது வாக்குகள் அளிக்கப்படலாம்.

தேர்தல் காலத்தில் தேர்தல் புறக்கணிப்பானது தமிழர் பிரச்சினைகள் குறித்த பேச்சுகளை உறுதி செய்யாது. பத்திரிகைகளில் வாக்காளர் எண்ணிக்கை குறைவு என மட்டுமே கூறப்படும். மத்திய அரசுக்கு நெருக்கமான தரப்புகள் மக்கள் அதிக எண்ணிக்கையில் வாக்களித்தனர் என்றும், தமிழ் மக்கள் தேர்தலைப் புறக்கணித்த போதிலும் அதிக அளவான மக்கள் வாக்களித்தனர் என்றும் செய்திகளை வெளியிடக் கூடும்.

மறுபுறத்தில் கஜேந்திரகுமார் போன்ற மூன்று மொழிகளையும் சரளமாகப் பேசக்கூடிய பொது வேட்பாளர் ஒருவரால் தமிழ் மக்களுக்கு நல்ல சேவையை வழங்க முடியும். மூன்று மொழிகளும் தெரிந்த ஒரு பொது வேட்பாளரால் ஏனைய இன சமூகங்களுக்கும் தகவல்களை எடுத்துச் சொல்ல முடிகின்றது.

மேலும், ஜனாதிபதித் தேர்தல் பிரசார காலத்தில் தொலைக்காட்சி, பத்திரிகை உள்ளிட்ட அனைத்து ஊடகங்களிலும் தனது நிலைப்பாட்டை ஏனைய மொழிகளிலும் வெளிப்படுத்த முடியும். குறிப்பாக தமிழர்களின் கருத்துக்களை வெளிப்படுத்தக் கூடிய சந்தர்ப்பம் உருவாகும். ஆங்கிலப் பத்திரிகைகளும் எமது பிரச்சினைகளை முழுமையாக வெளிப்படுத்துவதில்லை.

இராஜதந்திர சமூகங்களுக்கும் வடக்கு, கிழக்கின் கள நிலைமைகளை எடுத்துரைக்க முடியும்.

இறுதியாக தமிழ் வேட்பாளர் ஒருவரினால் தனிச் சிங்கள வேட்பாளர் ஒருவர் 50 வீத வாக்குகளைப் பெற்றுக்கொள்வதைத் தடுக்க முடியும். சில வேளைகளில் தடுக்க முடியும். விருப்பத் தெரிவு முறையின்போது பல சிங்களவர்கள் தமிழ் வேட்பாளருக்கு விருப்பத் தெரிவு ஒன்றை வழங்கக்கூடும்.

எனவே, பொதுவான தமிழ் வேட்பாளர் ஒருவரைக் களமிறக்க வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு. கஜேந்திரகுமார் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் எனது வாக்கு அவருக்கே. எனினும், அவர் தொலைக்காட்சியில் சிங்கள மொழியில் உரையாற்ற வேண்டும். எங்கள் தமிழர் பிரச்சினைகளை அவர் எடுத்துரைக்க வேண்டும்என விரும்புகின்றேன்." – என்றார்.

## கொரோனாவால்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழந்தார்.

மதவாச்சி பகுதியைச் சேர்ந்த 54 வயதுடைய பெண்ணே உயிரிழந்துள்ளார் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சுவாசக் கோளாறு காரணமாக மதவாச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர், மேலதிக சிகிச்சைகளுக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்தநிலையில் சிகிச்சை பலனின்றி அவர் நேற்று உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மருத்துவ பரிசோதனையில் அவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## தமிழரசுக் கட்சியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சந்திப்பின்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாநாடு தொடர்பில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாநாடு நான் அறிந்தவரையில் திட்டமிட்டபடி ஜனவரி மாதம் 28 ஆம் திகதி நடைபெறும்.

எனினும், அதில் மாற்றங்கள் அல்லது ஏதும் வித்தியாசமான விடயங்கள் நடைபெற இருக்கின்றனவா? இல்லையா? என்பது தொடர்பில் எனக்கு எதுவும் தெரியாது.

ஆனால், ஒரு கட்சியினுடைய மாநாடு அறிவிக்கப்பட்டு பொதுச் சபை உறுப்பினர் எல்லாம் அழைக்கப்பட்டு மாநாட்டுக்குரிய அனைத்து ஏற்பாடுகளும் செய்த பின்னர் மாநாட்டை ஒத்திவைக்க வேண்டிய காரணம் நான் அறிந்த வரையில் இல்லை.

ஏனென்றால் பொறுப்புள்ள கட்சியென்றால் ஒரு மாநாட்டை நடத்தத் தீர்மானித்து அதற்கு ஒரு திகதியை அறிவித்தால் அந்தத் திகதியில் மாநாடு நடக்க வேண்டும். ஆகையினால் அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் மாநாடு நடக்க வேண்டும்.

எனினும், மாநாடு நடக்குமா என இந்தக் கேள்வி ஏன் இன்று எழுப்பப்படுகின்றது என எனக்குத் தெரியவில்லை. ஆனால், நான் அறிந்த வரையில் திட்டமிட்டபடி மாநாடு நடைபெறுவதில் தற்போது வரை எந்த மாற்றமும் இல்லை." – என்றார்.

இதேவேளை, 'இந்த மாநாட்டை ஒத்திவைக்கும் எண்ணம் ஏதும் கட்சிக்குள் இருக்கின்றதா?' எனக் கேட்டபோது, "அவ்வாறு ஒத்திவைக்கும் எண்ணம் எவருக்கும் இல்லை" – என்று அவர் பதிலளித்தார்.

"எங்களுடைய மனங்களில் மாநாட்டை ஒத்திவைக்கின்ற எண்ணம் இல்லை. கட்சியில் ஏனைய எவரிடமேனும் அப்படி ஒத்திவைக்கின்ற எண்ணம் ஏதும் இருக்கின்றதா என நீங்கள்தான் அறிய வேண்டும்." – என்றும் சாணக்கியன் எம்.பி. மேலும் கூறினார்.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## பொலிஸ் நடவடிக்கையின் தாற்பரியம்

போதைப் பொருள் கடத்தல், வர்த்தகம் மற்றும் பாவனை ஆகியவற்றுக்கு எதிராகவும், பாதாள உலகக் கும்பல்களுக்கு எதிராகவும் முழுமூச்சில் பெரும் யுத்த நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்திருப்பது போல பொலிஸ் தரப்பு ஆரவாரம் பண்ணுகின்றது. பல நூற்றுக்கணக்கானோர் அள்ளி உள்ளே போடப்பட்டிருக்கின்றார்கள். பெருமளவு போதைப் பொருள்கள், உடைமைகள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன என்று கூறப்படுகின்றது.

நல்ல விடயம்தான். ஆனால் இது தொடர்பான சட்டம் - ஒழுங்கு விடயத்தை நேரத்துடனே பொலிஸ் கவனித்திருந்தால் இப்படி ஒரேயடியாக யுத்தப் பிரகடனம் செய்ய வேண்டி நேர்ந்திருக்காது என்பதும் மறுக்கற்பாலது அல்ல.

இந்தக்குற்றக்கும்பல்களுக்கும்பொலிஸ் அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளுக்கும் உள்ள தொடர்புகளும் கூட இந்த ஆபத்து நிலைமை மோசமடைவதற்கு முக்கிய காரணம் என்பதையும் மறுக்க முடியாது.

போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் பாதாள உலக கும்பல்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முயன்றாராயினும், தேசியபாதுகாப்பில்கோட்டைவிட்டு ஈஸ்டர் தாக்குதலுக்கு இடமளித்தமை மூலம் அவரின் அந்த முயற்சி சரிவராமல் போயிற்று என்பது தெரிந்ததுதான்.

ஆரம்பத்தில் போதைப்பொருள் வர்த்தகத்திற்கான கைமாறும் கேந்திர இடமாக இருந்த இலங்கை, இப்போது அந்தப் பாவனை - நுகரும் - மையமாகவும் மாறிவிட்டமை மக்களின் துரதிஷ்டம்.

2013இல் டி.எம்.ஜயரத்ன பிரதமராக இருந்தபோது அவரது அலுவலகக் கடிதத் தலைப்பில் வந்த வேண்டுகோளின் அடிப்படையில், முன்னுரிமை ரீதியில் கொழும்புத் துறைமுகத்தில் இருந்து விடுவிக்கக் கோரப்பட்ட ஒரு கெண்டெய்னரில் 250 கிலோ ஹெரோயின் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

ஆனால், பிரதமரோ அவரது அலுவலகத்தினரோ இது தொடர்பில் எந்த நெருக்கடியையும் எதிர் கொள்ளவில்லை.

இப்போது கொடி கட்டி பறக்கும் நிமல் லான்ஸா எம்.பியின் இல்லம் இதே போன்ற ஒரு காரணத்தின் அடிப்படையில் 2011ஆம் ஆண்டில் விசேட அதிரடிப்படையினரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. ஆனால் அது நடந்த கையோடு கொழும்பிலிருந்து விசேட ஹெலிக்கொப்டரில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் நீர் கொழும்புக்கு நிமல் லான்ஸா வீட்டுக்குவிரைந்து, அவரைஆரத்தழுவி, சமாதானப்படுத்தி நிலைமையைச் சமாளித்தனர்.

அதனை அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ரணில் விக்கிரமசிங்க ‘நீர்கொழும்பு நாடகம்’ என்று வர்ணித்துக் கண்டித்து, கடுமையாக விமர்சித்திருந்தார்.

இப்போது ராஜபக்ஷக்களின் ஆதரவுடன் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி. நிமல் லான்ஸாவோ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மூத்த அரசியல் தளபதி.

நல்லாட்சிஅரசில்பிரதிஅமைச்சராக இருந்த ரஞ்சன் ராமநாயக்க, அந்த அரசின்சிலஅமைச்சர்கள்போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் என்று அப்போது பகிரங்கமாக குண்டு ஒன்றை வெடிக்க வைத்தார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் போதைப் பொருளுக்கு அடிமையானவர்களின் விவரங்கள் அடங்கிய பெயர்ப் பட்டியலைத் தான் நாடாளுமன்ற சபாநாயகரிடம் ஒப்படைத்திருக்கின்றார் என்றும் அப்போது ஊடகவியலாளரிடம் அவர் கூறினார்.

மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள்மத்தியிலும்போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் உள்ளனர் என்று அப்போது ரஞ்சன் ராமநாயக்கா குறிப்பிட்டமையும் கவனிக்கத்தக்கது.

இவ்வாறு குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான‘அரசியல்முதலைகள்’எவரும்சட்டத்தின் பிடியில் சிக்கியவர்களாகத் தெரியவில்லை.

அரசியல் தொடர்புள்ள முதலைகள் சிக்கினாலும் அவர்கள் பற்றிய செய்திகளை வெளியே விடாமல் பொலிஸேஅமுக்குகின்றநிலைமைஇப்போதும் தொடர்கதையாகத் தொடர்கின்றது.

இவற்றையெல்லாம்பார்க்கும்போது இப்போது பொலிஸ் ஆரம்பித்திருக்கும் ‘யுக்திய’ நடவடிக்கை கூட நம்பிக்கை தருவதாக இல்லை என்பது தான் உண்மை.

# பூரண அரசு மரியாதையுடன் விஜயகாந்த் உடல் நல்லடக்கம்

## – இறுதி ஊர்வலத்தில் மக்கள் வெள்ளம்



தே.மு.தி.க. நிறுவனத் தலைவரும், நடிகருமான விஜயகாந்தின் உடல் 72 குண்டுகள் முழுங்க முழு அரசு மரியாதையுடன் கோயம்பேட்டில் உள்ள கட்சி அலுவலகத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இறுதிச் சடங்கில் விஜயகாந்தின் குடும்பத்தினர், நெருங்கிய நட்பு வட்டம், முதல்வர் ஸ்டாலின், இந்நாள் – முன்னாள் அமைச்சர்கள், சில திரைப் பிரபலங்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக, தீவுத்திடலில் இருந்து கோயம்பேடு வரையிலான இறுதி ஊர்வலத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு கண்ணீருடன் தங்கள்கெப்டனுக்கு பிரியாவிடை கொடுத்தனர்.

தீவுத்திடலில் இருந்து கோயம்பேடு தே.மு.தி.க. அலுவலகத்துக்கு கொண்டு வரப்பட்ட விஜயகாந்தின் உடலுக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, மா.சுப்பிரமணியன், தா.மோ.அன்பரசன், உதயநிதி ஸ்டாலின், தி.மு.கவின் எம்.பியான டி.ஆர்.பாலு ஆகியோர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

முன்னதாக, தெலுங்கானா ஆளுநர் தமிழிசை, பா.ஜ.க. முன்னாள் தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன், அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார், தமாகா தலைவர் ஜி.கே.வாசன், முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோரும் அஞ்சலி செலுத்தினர். இதைத்தொடர்ந்து விஜயகாந்தின் குடும்பத்தினர் அஞ்சலி செலுத்தினர்.

தே.மு.தி.க. அலுவலகத்தில் நல்லடக்கம் செய்யப்பட்ட விஜயகாந்தின் உடல் சந்தனப் பேழையில் வைக்கப்பட்டது. இதற்காக 50 கிலோ எடை கொண்ட பிரத்யேக சந்தனப் பேழை தயார் செய்யப்பட்டிருந்தது.

அந்த சந்தனப் பேழையின் ஒரு புறத்தில் "புரட்சிக் கலைஞர் கெப்டன் விஜயகாந்த்" என்கிற வாசகமும், நிறுவனத் தலைவர் தேசிய முற்போக்கு திராவிட கழகம் என்கிற வாசகமும், அதேபோல் அவரின் பிறப்பு மற்றும் இறப்பு திகதிகளும் இடம்பெற்றிருந்தன.

இதேபோல் சந்தனப் பேழையின் மற்றொரு பக்கத்தில் "கெப்டன்" என்றும் பொறிக்கப்பட்டிருந்தது. அந்த சந்தனப் பேழையில் வைக்கப்பட்ட உடல் அடக்கம் செய்யப்படுவதற்காக குழிக்குள் இறக்கப்பட்டபோது உறவுகளும், நண்பர்களும், தொண்டர்களும் கதறி அழும் காட்சி காண்போரை கண்கலங்கச் செய்தது. முன்னதாக, விஜயகாந்தின் உடல் தீவுத்திடல் மைதானத்தில் அஞ்சலிக்காக நேற்று வைக்கப்பட்டது. மக்கள் அஞ்சலி செலுத்தி சென்று திரும்ப ஏதுவாக பாதைகள் அமைக்கப்பட்டன.

இதனால் மக்கள் திரளாக வந்து அஞ்சலி செலுத்தினர். பாதுகாப்புப் பணியில் ஆயிரக்கணக்கான பொலிஸார் ஈடுபட்டனர்.

பின்னர், தீவுத்திடலில் தொடங்கிய இறுதி ஊர்வலத்தில் பல்லாயிரக்கணக்கான தொண்டர்களும், பொதுமக்களும், ரசிகர்களும் கலந்துகொண்டு கண்ணீருடன் பிரியாவிடை அளித்தனர்.

# கோயம்பேட்டில் விஜயகாந்துக்கு நினைவிடம்: பொதுமக்களுக்கு நன்றி கூறினார் பிரேமலதா

"சென்னை மெரினா கடற்கரையில் ஒவ்வொரு தலைவர்களுக்கு நினைவிடம் அமைத்துள்ளது போல் விஜயகாந்துக்கும் கோயம்பேட்டில் நினைவிடம் அமைக்கப்படும்"

–இவ்வாறு தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் கூறியுள்ளார்.

கோயம்பேட்டில் உள்ள தே.மு.தி.க. அலுவலகத்தில் விஜயகாந்தின் உடல் அரசு மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது. பின்னர், அங்கு செய்தியாளர்களைச் சந்தித்த தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா,

" தமிழக அரசியல் வரலாற்றில் எந்தவொரு தலைவருக்கும் கிடைக்காத ஒரு மிகப்பெரிய பேறு நமது விஜயகாந்துக்கு கிடைத்திருக்கிறது.

நமக்கு கிடைத்த புள்ளி விவரப்படி, இரண்டு நாள்களாக நடந்த விஜயகாந்தின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள், 15 லட்சத்துக்கும் அதிகம் என்று கூறியுள்ளனர். இதுபோன்ற உணர்ச்சிவசப்பட்ட பாசமான கூட்டத்தை தமிழகம் முதல் முறையாக கண்டு இருக்கிறது.

அதற்கு காரணம் விஜயகாந்த் செய்த தர்மமும், அவரது நல்ல எண்ணமும், இறுதிவரை மற்றவர்களுக்கு உதவிகளை செய்ததும்தான்." – என்றார்.

# உக்ரைன் மீது ரஷ்யா மீண்டும் தாக்குதல்: 12 பேர் நேற்று உயிரிழப்பு, 60 பேர் காயம்



உக்ரைனுக்கு எதிராக ரஷ்யா மீண்டும் பாரிய தாக்குலை ஆரம்பித்துள்ளது.

இந்த நிலையில், 12 பேர் நேற்று கொல்லப்பட்டுள்ளார் என அறிவிக்கப் பட்டுள்ளது.

இதுதவிர, 60 பேர் காயமடைந் துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவினால் புதிதாக ஆரம்பிக்கப் பட்ட தொடர்ச்சியான தாக்குதலின் போது 158 ஆளில்லா விமான தாக்குதல் மற்றும் ஏவுகணை பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என உக்ரை னிய இராணுவம் தெரிவித்துள்ளது.

ஒரே நேரத்தில் பல இலக்குகளை குறிவைத்து ரஷ்யா தாக்குதலை மேற் கொண்டுள்ளதாக குறிப்பிடப்பட் டுள்ளது.

ரஷ்யாவின் ஆயுத களஞ்சியத்தில் உள்ள சகல விதமான ஆயுதங்களையும் பிரயோகித்து வீடுகள், மகப்பேறு வைத்தியசாலைகள் உட்பட பல இலக்குகளை நேற்று காலை ரஷ்யா தாக்கியுள்ளதாக உக்ரைனிய ஜனா திபதி வொலோடிமிர் செலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

உக்ரைனின் தலைநகர் கீவ் உட்பட மேற்கு, தெற்கு மற்றும் கிழக்கு பிராந்தி யங்களில் உள்ள பல நகரங்கள் தாக்கப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட் டுள்ளார். இந்த நிலையில், மேலும் இராணுவ உதவிகளை மேற்குலக நாடுகள் உக்ரை னுக்கு வழங்க முன்வர வேண்டும் என வும் கோரப்பட்டுள்ளது.

அதேவேளை, ரஷ்யாவின் கட்டுப் பாட்டின் கீழ் உள்ள கிரிமியன் துறை முகத்தில் நங்கூரம் இட்டிருந்த ரஷ்ய யுத்த கப்பல் ஒன்று உக்ரைனால் தாக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

அதேவேளை, உக்ரைனிய இராணு வம் யுத்த முனையில் வெற்றியடைந்து வருவதாகவும் ரஷ்யா பெரிய அளவிலான இழப்பினை எதிர்கொண்டு வருவதாகவும் ஜேர்மன் பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர் பொறிஸ் பிரிஸ்ரோரியஸ் தெரிவித்துள்ளார்.

இது தவிர ரஷ்யாவின் கருங்கடல் கடற்படை, மேற்கு கருங்கடல் பிராந் தியத்தில் இருந்து வெளியேற்றப்பட் டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட மற்றுமொரு மாகாணம் ட்ரம்புக்கு தடை

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அதில் போட்டியிடவுள்ள டொனால்ட் ட்ரம்ப் இற்கு அமெரிக்காவின் மற்றுமொரு மாகாணம் தடை விதித்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட தயாகவுள்ள டொனால்ட் ட்ரம்ப் போட்டியிடக்கூடாது என்று கொலராடோ மாகாணத்தைத் தொடர்ந்து மைனே மாகாணத்திலும் தடை விதிக்கப்பட்டுள்ளது.



கடந்த 2020 ஆம் ஆண்டு இடம் பேற்ற அமெரிக்க ஜனாதிபதி தேர்த லில் போட்டியிட்ட அப்போதைய ஜனா திபதி டொனால்ட் ட்ரம்ப் தோல்வி அடைந்தார்.

ஆனால் தேர்தலில் முறைகேடு நடந்ததாக கூறி டிரம்ப் தனது தோல் வியை ஏற்க மறுத்ததால் அவரது ஆதர வாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில் நாடாளுமன்றத்துக்குள் புகுந்து வன்முறையில் ஈடுபட்டனர். வன்முறையை தூண்டினார் என டிரம்ப் மீது பல்வேறு மாகாண நீதி மன்றங்களில் வழக்குகள் தொடரப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

# உலக மக்கள் தொகை 75 மில்லியன் ஆக அதிகரிப்பு

அமெரிக்க மக்கள் தொகை கணக் கெடுப்புத் திணைக்களத்தின் படி, 2023 ஆம் ஆண்டில் உலக மக்கள் தொகை 75 மில்லியன் ஆக அதிகரித்துள்ளது.

அத்தோடு, 2024 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்குள் உலகம் முழுவதும் 08 பில்லியன் மக்கள் வாழ் வார்கள் என அந்த திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது. ஆனாலும், இந்த ஆண்டு உலக மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் 1 சதவீதத்திற்கும் குறைவாகவே காணப் படுகின்றதாகவும் கூறப்படுகிறது.

அதன்படி, 2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், ஒவ்வொரு நொடிக்கும் 4.3 பிறப்புகள் பதிவாகும் போது, 02 இறப்புகள் ஏற்படக்கூடும் என்று அமெரிக்க மக்கள் தொகை கணக்கெடுப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டில், அமெரிக் காவின் மக்கள்தொகை வளர்ச்சி விகிதம் 5.3 சதவீதமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்த ஆண்டில் அமெரிக்காவின் மக்கள் தொகை 1.7 மில்லியனாக அதி கரித்துள்ளது.



# இரண்டு படகுகள், வலைகள் வடமராட்சி கிழக்கில் எரிப்பு

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம், டிச.30

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கேவில் கடற்றொழிலாளர்கள் சங்கத்திற்கு உட்பட்ட இரண்டு படகுகள் மற்றும் ரூபா 14 லட்சம் பெறுமதியான வலைகள் என்பன நேற்றுக் காலை விசமிகளால் தீயிட்டு கொழுத்தப்பட்டுள்ளது.

கேவில் பாலையடி மேற்கு களப்பில் நேற்று அதிகாலை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

இரண்டு நாள்களுக்கு முன்பு நடைபெற்ற கேவில் கடற்றொழிலாளர் கூட்டத்தில் இறால்களின் இனப்பெருக்கத்திற்காகவும், இறாலின் பருமன் வளர்ச்சியை அதிகரிப்பதற்காகவும் இறால் கூடு கட்டுவதை தற்காலிகமாக தடை செய்து முடிவு எடுக்கப்பட்டிருந்தது.

இதை மீறி தொழிலில் ஈடுபட்ட பலரின் உபகரணங்கள் கைப்பற்றப்பட்டன. விசமி ஒருவர் இரண்டு மீனவர்களுக்குச் சொந்தமான மீன்பிடி உபகரணங்களை தீயிட்டு எரித்துள்ளார் என்ச் கேவில் கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர்.

இச் சம்பவம் தொடர்பாக மருதங்கேணி பொலிஸாரிடம் முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டுள்ளது.



# கடற்றொழிலாளரின் பிரதிநிதிகளை ரணில் யாழ் வரும்போது சந்தித்துப் பேச வேண்டும்

## மயிலிட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் கோரிக்கை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொள்ளும்போது கடற்றொழிலாளர் பிரதிநிதிகளை அழைத்துப் பேச வேண்டும் என மயிலிட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதி சிவஞானராஜா மகேஸ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்திய மீனவர்களின் அத்துமீறிய இழுவைமடிப் பிரச்சினைக்கு யாரும் தீர்வு தருவதாக இல்லை. கடற்படையும் அதிகளவான படகுகளை பிடிப்பது




கிடையாது. ஆகவே ஜனாதிபதி எமது பிரதிநிதிகளைச் சந்தித்து ஒரு தீர்வை எட்ட வழிசெய்ய வேண்டும் என்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த வாரம் வடக்கு மாகாணத்திற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.




# மட்டக்களப்பு மாவட்டத்தில் பல பகுதிகளிலும் கன மழை

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பில் அதிகளவான மழையினால் நவகிரி குளத்தின் நீர் மட்டம் உயர்வடைந்ததன் காரனமாக அதன் இருவான்கதவுகள் ஆறு அடி மட்டத்திற்கு திறந்து விடப்பட்டுள்ளன. இதன் காரனமாக வெல்லாவெளி பிரதேச செயலக பிரிவின் வேற்றுச்சேனை கிராம மக்கள் அவதானத்துடன் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேலும் கிரான் பிரதேச செயலக பிரிவின் புலிபாஞ்சகல் பாதையின் நீர் மட்டம் அதிகரித்துள்ளதால் பாதையைப் பயன் படுத்தும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயல்ப்படும் படியும் அவர்களின் வசதிக்காக டிராக்டரில் பயனிக்கும் படியும் மக்கள் வேண்டப்படுகின்றனர்.



பொது மக்கள் நிர் நிலைகளில் நீராடுவது மற்றும் விளையாடுவது மீன் பிடிப்பது போன்ற செயற்பாடுகளில் இருந்து சற்று தவிர்த்து இருக்கும் படியும், நீர் நிலைகள அண்டியுள்ள பொது மக்கள் அதிகளவான மழை வீழ்ச்சி கிடைக்குமாயின் பாதுகாப்பான இடங்களில் தங்குவது நல்லது என்றும் அதிகாரிகள் மக்களுக்குத் தொடர்ச்சியாக அறிவுறுத்தி வருகின்றனர்.

குளங்களை அண்டி வாழ்கின்ற மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயல்படும் படி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதி பணிப்பாளர் எம்.சி.எம். றியாஸ் மாவட்ட ஊடகப் பிரிவிற்கு தெரிவித்தார்.

# மட்டு. - பொலன்னறுவை பிரதான வீதி வெள்ளம் காரணமாக மூடப்பட்டுள்ளது

## மாற்று வீதிகளைப் பயன்படுத்த அறிவுறுத்தல்




(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

பராக்கிரம வாவியின் வான் கதவுகள் நேற்று இரவு 10.00 மணியளவில் திறக்கப்படவிருந்ததால், மட்டக்களப்பு – பொலன்னறுவை பிரதான வீதி மறு அறிவித்தல் வரை முற்றாக மூடப்படும் என்று பொலன்னறுவை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதன்படி, வெலிகந்த, திம்புலாகலை மற்றும் மட்டக்களப்பு செல்லும் பயணிகளின் வசதிக்காக கதுருவெல ரயில் நிலையத்தில் இருந்து மன்னம்பிட்டி நோக்கி விசேட ரயில் சேவையொன்று காலை 10.30 மணி முதல் இடம்பெறும் என கதுருவெல ரயிக் நிலைய அதிபர் தெரிவித்தார்.

மற்றும் மட்டக்களப்பு நோக்கி பயணிக்கும் வாகனங்கள் மாற்றுப் பாதையாக கிரிதலே, எலஹெர, பகமூனை, தெஹிஅத்த கண்டிய வீதி ஊடாகப் பயணிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.




# வெள்ளத்தில் கந்தசுவாமி ஆலயம் காரைதீவு எங்ஙனும் வெள்ளக்காடு

(வி.ரி. சகாதேவராஜா)

கடந்த சில நாள்களாகப் பொழிந்த கனமழையையடுத்து காரைதீவு வெள் ளக் காடாகக் காட்சிளிக்கிறது. குறிப் பாக கந்தசுவாமி ஆலய வளாகத்தில் வெள்ளம் சூழ்ந்துள்ளது.

மக்கள் வெள்ளம் பாய அதனூடாகச் சென்று வருகிறார்கள்.

மேலும் காரைதீவிலுள்ள தாழ் நில பிரதேசங்களிலும் வயல் வெளிகளிலும் வெள்ளம் தேங்கி நிற்கிறது. மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டுள் ளது.

குழாய் நீர் விநியோகம் சீராக இல் லாத நிலையில் மக்கள் பலத்த அசௌ கரியத்திற்குள்ளானார்கள்.

வீதி வடிகால்கள் மக்களாலும் பிர தேச சபையினராலும் ஆங்காங்கே சுத்தம் செய்யப்பட்டு வருகின்றன.

பெரும்பாலான வீடு வாசலில் வெள்ளம் தேங்கி நிற்கிறது.

மழைவெள்ளத்தினால்அதிகம்பாதிக் கப்படக் கூடிய பிரதேசங்களை அடை யாளம் காண்பதுடன் வெள்ளம் ஏற்படுவ தற்கான மூல காரணங்களை அடையா ளம் கண்டு அதனை நிவர்த்தி செய்வ தற்கான ஒழுங்குகள் உரிய திணைக் களத்தினூடாக முன்னெடுக்கப்பட்டுள் ளன என அனர்த்த முகாமைத்துவ சேவை தெரிவித்துள்ளது.





# களுத்துறை சிறைச்சாலையில் மற்றுமொரு கைதி உயிரிழப்பு

## காரணம் இன்னமும் கண்டறியப்படவில்லை

களுத்துறைச் சிறைச்சாலையில் கைதி ஒருவர் நாகொட பொது வைத் தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரி ழந்துள்ளார்.

சிறைச்சாலைகள் ஆணையாளரும் பேச்சாளருமான காமினி பீ.திஸா நாயக்க இது தொடர்பில் கூறுகையில், இந்த கைதி நேற்று வியாழக்கிழமை (டிசம்பர் 28) காய்ச்சலுக்கான சிகிச் சையைப் பெற்றிருந்த போதிலும், அவர் மீண்டும் சுகவீனமடைந்து, பின்னர் நாகொட வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டார்.

போதைப்பொருள் தொடர்பான குற்றச்சாட்டில் சிறை வைக்கப்பட்டிருந்த இவருக்கு திடீரென ஏற்பட்ட சுகயீனத்தை அடுத்து உடல் நலக்குறை ஏற்பட்டது. இதன் காரணமாக நாகொட வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இவர் உயிரிழந்துள்ள போதிலும் மரணத்திற்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை. - எனவும் காமினி பீ.திஸாநாயக்க தெரிவித்தார்.

கைதிகளுக்கு நோய் தொற்றுகள் ஏற்படுவதால் மாத்தறை சிறைச்சாலை யில்தண்டனைஅனுபவிக்கும்அனைத்து புதிய கைதிகளும் அங்குனகொல பெலஸ்ஸ சிறைச்சாலைக்கு திருப்பி அனுப்பப்பட உள்ளனர் எனவும் காமினி திஸாநாயக்க கூறினார்.

களுத்துறை சிறைச்சாலையின் மற்றுமொரு கைதி கடந்த வாரம் நிமோ னியா காய்ச்சலால் உயிரிழந்தமையு டன், மாத்தறை சிறைச்சாலையில் 17 கைதிகள் மூளைக்காய்ச்சல் காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், அவர்களில் ஒருவர் சுகயீன மடைந்து உயிரிழந்துள்ளார்.

இதேவேளை,செப்டெம்பர்மாதம்காலி சிறைச்சாலையில்இருகைதிகள்மூளைக் காய்ச்சலால் உயிரிழந்துள்ளனர்.




**உரலார் கேள்வி :- கிழக்கு மாகாணக் 'கவர்னர்' கௌரவ செந்தில் தொண்டமான் அவர்களைச் சென்ற வாரம் புகழ்ந்து தள்ளியிருந்தீர்கள். முடிவில் நம் தலைவர்களுடனான ஒப்பீடு வேறு. நம்மவர்கள் கோபிக்கமாட்டார்களா?**

**உலக்கையார் பதில் :-** புகழ்பெற்ற எழுத்தாளர் ஜெயகாந்தனால் பிரபல்யப்பட்ட 'உண்மை சுடும்' என்ற வாசகம் ஒன்று இருக்கிறது. உங்களது கேள்வியைப் பார்த்ததும் அதுதான் என் ஞாபகத்திற்கு வருகிறது. எனக்கு எவர் மீதும் பகையில்லை. மனதிற்குச் சரியென்று பட்டதை எப்போதும் எழுதிவருகிறேன். நம் இனம் உயரவேண்டும் என்பதற்காகவே எனது எழுத்தாணி தாள்களை உழுது வருகின்றது. அந்த உழுதல் முயற்சியின் ஒரு வடிவம்தான் உலக்கையார் பதில்களும். அப்பதில்கள் எவருக்கேனும் கோபத்தைத் தருமானால், அது அவர்களைச் சுட்டிருக்க வேண்டும். அப்படிச் சுட்டிருக்குமெனின் ஜெயகாந்தனின் கூற்றுப்படி நான் எழுதியது உண்மை என்று ஆகிவிடும். என்னால் சொல்லக்கூடியது அவ்வளவே.



**சல்லடையார் சலிப்பு - 'சட்டி சுட்டதடா கையை விட்டதடா'......... ஹீ ஹீ ஹீ ஹீ**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**உரலார் கேள்வி :- அடிக்கடி தமிழ்நாடு பி.ஜே.பி. மாநிலத் தலைவர் அண்ணமலையாரைப் பாராட்டுகிறீர்கள். அப்படி மற்றைய தலைவர்களைவிட அவரில் என்னதான் சிறப்பைக் கண்டுவிட்டீர்களாம் ?**

**உலக்கையார் பதில் :-** எனக்கு ஒருவரோடும் பகையில்லை என்று முதல் கேள்விக்குச் சொன்ன அதே பதிலை மீளச் சொல்ல வேண்டியிருக்கிறது. நான் திருக்குறளை நம்புகிறவன். அந் நூலில் வள்ளுவப் பெருந்தகை ஒரு நல்ல தலைவனுக்



குரிய ஏழு பண்புகளை வரையறுத்துக் காட்டுகிறார். அவற்றை உங்களுக்கு விளங்கும் படியாக கீழே தருகிறேன். ஆதனை முதலில் படியுங்கள்.

- அஞ்சாமை – மன உறுதி
- ஈகை – கொடை
- அறிவு – இயற்கை அறிவு
- ஊக்கம் – நினைத்ததைச் செய்யும் மன எழுச்சி
- தூங்காமை – எடுத்த காரியங்களை விரைவாய் முடிக்கும் தன்மை
- கல்வி – படிப்பறிவு
- துணிவுடமை – ஆண்மை

எனக்குத் தெரிந்த அளவில் மேற்சொன்ன ஏழு விடயங்களில் ஆறில் அண்ணாமலை முழுச்சித்தி அடைகிறார். அவரது கொடைபற்றி மட்டும் விரிவாய் எனக்கு ஒன்றும் தெரியவில்லை. வள்ளுவரின் பரீட்சைத்தாளில் ஏழில் ஆறு பெற்று முதன்மையுறும் ஒருவரைப் பாராட்டாமல் எப்படி இருப்பதாம்?

**சல்லடையார் சலிப்பு - 'அண்ணாமலையான் அடிக்கமலம் சென்றிரஞ்ச' - திருவெம்பாவை வீதி பஜனை செய்வதோடு வாரிதியார் நீதி பஜனையும் செய்கிறார் போல....!**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**உரலார் கேள்வி :- அண்மையில் உங்களது 'உன்னைச் சரணடைந்தேன்' எனும் நூலை முகநூலில் மிக அழகாக வெளியிட்டிருந்தீர்கள். அதனைப் படித்து வியப்படைந்தேன். எத்தனையோ இடர்களைத் தாண்டி இன்றைய உயர்வைத் தொட்டிருக்கிறீர்கள். உங்களது வெற்றிக்கான காரணம் எது என்று நினைக்கிறீர்கள்?**

**(15ஆம் பக்கம் பார்க்க)**

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

**உலக்கையார் பதில் :-** உங்கள் கேள்விக்கான பதிலை 'செய்நன்றியறிதல்' எனும் ஒரே தொடரால் சொல்லி முடித்துவிடலாம். ஆனாலும் இப் பதிலைச் சற்று விரித்துரைக்க வேண்டி இருக்கிறது. அதற்கு முன்பாக முகநூலில் 'உன்னைச் சரணடைந் தேனை' இவ்வளவு அழகாக வெளியிட்டு உத விய வணக்கத்திற்குரிய கோவிலூர் மடாதிபதி அவர்களுக்கு எனது நன்றியறிதலைச் சமர்ப் பிக்கிறேன்.

எனது உயர்வுக்குப் பின்னால் என்னை இந்த உயரத்திற்குத் தூக்கிவிட்ட எத்தனையோ பேர் இருந்திருக்கிறார்கள். அதில் என்னை இந்த நிலைக்கு உயர்த்திய எனது தாயார் வழிக் குல தெய்வமாகிய சண்டிலிப்பாய் ஐயனாருக்குத்தான் நான் எனது முதல் நன்றியறிதலைத் தெரிவிக் கவேண்டியிருக்கிறது.

கண்டநாள்த்தொட்டு இன்றுவரை அத் தெய்வம் கைபிடித்து என்னை அழைத்துச் சென்றிராவிட் டால் இந்த உயரத்தை நிச்சயம் நான் தொட்டிருக்க முடியாது. இந்த உயரத்தை என்பது கூடத் தவ றாய்ப் படுகிறது. எந்த உயரத்தையுமே நான் தொடும் வாய்ப்பு இருந்திருக்காது என்பதுதான் உண்மை.

'சரஸ்வதி சபதம்' படத்தில் ஊமையாய் இருந்த ஒருவனை சரஸ்வதிதேவி பேசவைத்துப் பெரும் புலவனாக்குவாள். உங்களுக்கெல்லாம் அது வெறும் சினிமாப்படம். எனக்கு அதுவேதான் வாழ்க்கை. இன்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்த ஜெயராஜை அறிந்தவர்கள் அவன் தான் இன்றிருக்கும் ஜெயராஜ் என்பதை எந்தக் கோயிலில் சத்தியம் பண்ணிச் சொன்னாலும் நம்பமாட்டார்கள்.

அதற்குப் பிறகு தங்கள் விருப்பங்களை என்மேல் ஏற்றி, என் இயல்பான இலட்சியப் பயணத்தைச் சிதைக்காத எனது பெற்றோர், வாசிக்கக்கூடத் தெரியாத மிகச் சிறுவயதில் இலக்கியங்களை எனக்கு வாசித்துக் காட்டி எனக்குள் இலக்கிய ஆர்வத்தை விதைத்துவிட்ட என் ஒரே சகோதரன், தனது பேச்சாற்றலால் என்னைக் கம்ப பித்த னாக்கிய எனது குருநாதர் மறைந்த திருச்சிப் பேரா சிரியர் இரா. இராதாகிருஷ்ணனும், என்னை வளர்த் தெடுத்த மற்றைய ஆசிரியர்களும்.....

என் குருநாதர் வார்த்தைகளூடு எனது மனத் தினுள்ளும், புத்தியினுள்ளும் புகுந்து தனது பெயரை எனக்கு அடையாளமாய்த் தந்த கவிச் சக்கரவர்த்தி கம்பன், கம்பனின் தொண்டை என் வாழ்வின் இலட்சியமாக்கிய 'கம்பனடிப்பொடி', எனக்காகத் தங்கள் தனிவாழ்வின் உயர்வுகளைத் தியாகம் செய்து, எனது உயர்வைத் தங்களது உயர்வாய் இன்றுவரை நினைந்து வாழ்ந்து வரும் குமாரதாசன், ஸ்ரீஇரத்தினகுமார் போன்ற நண்பர்கள்.....

நான் தூக்கிய கழகக் காவடியைத் தங்கள் தோள்களிலும் ஏற்றுக்கொண்டு உடன் பய ணித்த மாணவர்கள், இன்று கடல் கடந்து நின் றும் தங்களது அறிவுப் பசியால் என் அறிவை வளர்த்துவரும் எனது தமிழ்நாட்டு மாணவர்கள், எனது இலட்சியத்தைத் தமது செல்வத்தால் உரமிட் டுக் காத்துவரும் வள்ளல்கள் என எத்தனையோ பேர் எனது இன்றைய வளர்ச்சியின் பின் இருக்கி றார்கள்.

இவ்வளவுபேரும் எந்தப் பிரதிபலனும் எதிர் பாராமல் என்னை உயர்த்திக்காட்டி என் முகம் கண்டு உலகம் மகிழ, அதுகண்டு தாமும் மகிழ்ந்து நிற்கிறார்கள். எத்தனை பிறவியெடுத்தாலும் இவர்களுக்கான நன்றிக்கடனை என்னால் அடைக்கமுடியும் என்று தோன்றவில்லை. ஏதோ என்னால் முடிந்த செயலாய், என் வாழ்வின் ஒவ் வொரு வினாடியும் அவர்களுக்கு நன்றிபாராட்டி வாழ்ந்து வருகிறேன். அத்தனை பேரதும் திசை நோக்கி என்மனம் அன்றாடம் தொழுது நிற்கிறது. அதுதான் என்னை மேலும், மேலும் உயர்த்து வதாய் உணர்கிறேன்.

**சல்லடையார் சலிப்பு - எங்களுக்கு வாரிதி யாரை ஆக்கித் தந்த அந்த நல்லவர்க ளுக்கு சல்லடையாரின் 'சல்யூட்'!**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**உரலார்கேள்வி :- இம்முறை தமிழ் நாட்டி லும் இங்குமாக அடித்துக் கொட்டிக் கொண் டிருக்கும் மழைபற்றி என்ன நினைக்கிறீர் கள்?**

**உலக்கையார் பதில் :-** அது அறம் தேய்வதால் வரும் இயற்கையின் கொந்தளிப்பாய் எனக்குப் படுகிறது.




**சல்லடையார் சலிப்பு - 'கெடுப்பதூஉம் கெட் டார்க்குச் சார்பாய் மற்றாங்கே எடுப்பதூ உம் எல்லாம் மழை' வள்ளுவர் கருத்தை வழி மொழிகிறார் வாரிதியார்.**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# உயர்தரப் பரீட்சை தொடங்குவதால் மேலதிக வகுப்புகளை நடத்தத் தடை

இந்த வருடத்துக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சை தொடர்பான மேலதிக வகுப்புகளை நடத்தவும் அது தொடர்பான பிரசாரங்களை மேற்கொள்வதும் நேற்று வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் தடைசெய்யப்பட்டுள்ளன.

இதற்கமைய மேலதிக வகுப்புகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள், விரி வுரைகள் உள்ளிட்டவற்றுக்கு நேற்றைய தினம் நள்ளிரவு 12 மணி முதல் பரீட்சை நிறைவடையும் வரை தடை விதிக்கப் பட்டுள்ளதாக இலங்கை பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தவிர பரீட்சை தொடர்பான மாதிரி வினாத்தாள் உள்ளிட்ட வினாப்பத்தி ரங்களை அச்சிடுதல், அவற்றை விநி யோகித்தல், பரீட்சை வினாத்தாள் களின் வினாக்களை வழங்குவதாக அல்லது அதற்கு சமமான வினாக் களை வழங்குவதாக பதாதைகள் காட்சிப் படுத்தல்கள், கையேடுகள் ஆகிய வற்றை அச்சு அல்லது இலத்திரனியல் ஊடகங்களின் ஊடாக பிரசாரம் செய்ய வும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவை மீறி செயற்படும் நபர்கள் அல்லது நிறுவனங்கள் தொடர் பில் அருகிலுள்ள பொலிஸ் நிலையம், பொலிஸ் தலைமையகம் அல்லது தமது திணைக்களத்திற்கு அறியத்தருமாறு பரீட்சைகள் திணைக்களம் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மேலும், 2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை ஜனவரி 04 ஆம் திகதி முதல் ஜனவரி 31 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.



# ஜனாதிபதித் தேர்தல் பிரசார முன்னோட்டம்

# சஜித்தின் கூட்டம் இன்று மாத்தறை நகரில்!

## பிரமாண்ட ஏற்பாடுகள் நடக்கின்றனவாம்

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தை ஆரம்பிப்பதற்கான ஆரம்பகட்ட கூட்டங்களை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நாடு முழுவதும் ஆரம்பிக்க உள்ளது. அதற்கான ஏற்பாடுகளையும் அக்கட்சி செய்துள்ளது.

அடுத்த ஆண்டு நவம்பர் மாதத்திற்கு முன்னர் அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற வேண்டும். ஆனால், தேர்தலை ஒத்திவைப்பதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டு வருவதாக எதிர்க்கட்சி குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளது.

என்றாலும், ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள் தேர்தலுக்கான தயார்ப்படுத்தல்களில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. எதிர்வரும் 19ஆம் ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரத்தை ஆரம்பிக்க உள்ளது. அக்கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பிரமாண்ட கூட்டமொன்று கொழும்பில் இடம்பெற உள்ளது.

இந்தக் கூட்டத்தில் ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட்பாளராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அறிவிக்க அக்கட்சி தீர்மானித்துள்ளது.

ஆளுங்கட்சியான பொதுஜன பெரமுன ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் சில மாறுபட்ட நிலைப்பாடுகளை கொண்டுள்ளதால் போட்டியில் ஐ.தே.க முந்திக்கொள்ளும் நோக்கில் வேட்பாளர் அறிவிப்பை செய்ய உள்ளது.

ஆளுங்கட்சியான பொதுஜன பெரமுனவில் 4 பேரின் பெயர்கள் ஜனாதிபதி வேட்பாளருக்காக முன்மொழியப்பட்டுள்ளன. அதில் ஜனாதிபதி ரணில் விக்க்க்ரமசிங்க மற்றும் வர்த்தகர் தம்மிக்க பெரேராவின் பெயர்களும் உள்ளடங்கியுள்ளன. என்றாலும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கான ஆதரவு குறைவாகவே உள்ளது.

வர்த்தகர் தம்மிக்க பெரேராவுக்கும் பொதுஜன பெரமுனவின் முன்னாள் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷவுக்குமான நட்பு மிகவும் நெருக்கமானதாக உள்ளது. அதனால் தம்மிக்க பெரேராவின் பெயரை பஸிலுக்கு ஆதரவானவர்கள் முன்மொழிந்து வருகின்றனர்.

என்றாலும், ஆளுங்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என இன்னமும் இறுதிப்படுத்தவில்லை. அதனால் களத்தில் முந்திக்கொள்ளும் முனைப்பில் ஜனாதிபதி ஈடுபட்டுள்ளார்.

இந்நிலையில், எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நாளை சனிக்கிழமை மாத்தறையில் பிரமாண்ட கூட்டமொன்றுக்கு ஏற்பாடு செய்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் இக்கூட்டம் நடைபெற உள்ளது. ஜனாதிபதித் தேர்தலுக்கான ஆரம்பகட்ட பிரசாரமாக இது இருக்கும் என அக்கட்சி வெளியிட்டுள்ள விளம்பரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆளும், எதிர்க்கட்சிகளுக்கு இடையிலான போட்டியால் ஜனாதிபதி தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது.




# இலங்கைக்குக் கடத்தத் தயாராக இருந்த அழகுசாதன, ஆடம்பரப் பொருள்கள் மீட்பு

## இராமநாதபுரம் கடற்கரையோரத்தில் கண்டுபிடிப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.30

இலங்கைக்குக் கடத்தத் தயார் செய்யப்பட்டிருந்த பெருந்தொகை அழகுசாதன மற்றும் ஆடம்பரப் பொருள்கள் தமிழ்நாட்டின் இராமநாதபுரத்தில் தமிழக பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இராமநாதபுரத்தில் கடற்கரையோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தை சோதனை செய்த சமயம் அதில் 40 மூடைகளில் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றை சோதனை செய்த சமயமே அவை இலங்கைக்கு கடத்துவதற்காக எடுத்து வரப்பட்டவை என்பது தெரியவந்தது.

இவ்வாறு மீட்கப்பட்ட 40 மூடைகளிலும் - 3,700 சோப்; டெய்லி மில்க் கண்டோஸ் - 2,400; கிண்டர் ஜாய் சொக்லேட் - 560; வாசணை திரவியம் - 225; நுளம்புப் பத்திகுச்சிகள் - 2750; தூபக் குச்சிகள் - 805 பஞ்சாரஸ் அழகுசாதனப்பொருள்கள் - 1000 மற்றும் சிக் சம்போ - 65 ஆயிரம் ஆகியவையே கைப்பற்றப்பட்டுள்ளன.

தமிழகப் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்ட இப் பொருள்களின் இலங்கைப் பெறுமதி சுமார் 80 லட்சம் ரூபா எனத் தெரிவிக்கப்படுகின்றது.












# சிறுவர்களிடையே பரவும் இன்ஃபுளுவென்சர்

## முகக்கவசம் அணிய டாக்டர்கள் வழிகாட்டல்

தற்பொழுது சிறுவர்களிடையே இன்ஃபுளுவென்சா (Influenza) தொற்று அதிகம் பதிவாகி வருவதாக வைத்தியர்கள் தெரவித்துள்ளனர்.

தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த முகக்கவசம் அணிவது மிகவும் அவசியமென சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் டொக்டர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இருமல், காய்ச்சல், வாந்தி உள்ளிட்ட நோய் அறிகுறிகளே தொற்றுக்குள்ளான சிறுவர்களிடம் அதிகளவில் அவதானிக்கப்பட்டன என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

குடும்பத்தில் உள்ளவர்களுக்கு மிக வேகமாக காய்ச்சல் பரவும் எனின், அது இன்ஃபுளுவென்சா தொற்றாகவே காணப்படும் என வைத்தியர் குறிப்பிட்டுள்ளார்.

நோய் எதிர்ப்பு சக்தி குறைவான மற்றும் பல்வேறு நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள், இந்தத் தொற்றில் இருந்து பாதுகாத்துக்கொள்ளும் வகையில், பொது இடங்களுக்கு செல்வதை தவிர்ப்பதோடு, முகக்கவசம் அணிவது அவசியம் என அவர் வலியுறுத்தினார்.




# பரீட்சைகள் தொடர்பான கொடுப்பனவு ஆசிரியர்களுக்கு நாளைக்கு முன்னராம்

## பரீட்சைகள் ஆணையாளர் தெரிவிப்பு

சாதாரண தர மற்றும் புலமைப்பரிசில் பரீட்சைகளுக்கான மதிப்பீட்டு கொடுப்பனவுகள் ஆசிரியர்களுக்கு இதுவரை வழங்கப்படவில்லை என தொழிற்சங்கங்கள் குற்றம் சுமத்தியுள்ளன.

இதனால் ஆசிரியர்கள் கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர் என இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உயர் தரப் பரீட்சை வினாத்தாள் மதிப்பீட்டுக்காக ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் தற்போது குறைக்கப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த பரீட்சை மதிப்பீடுகளின் அடிப்படையில், ஆசிரியர்களுக்கான அனைத்து கொடுப்பனவுகளும் எதிர்வரும் 31ஆம் திகதிக்குள் (நாளைக்குள்) வழங்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் லசிக சமரகோன் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு உயர் தரப் பரீட்ச. செயற்பாடுகளுக்குப் போதிய எண்ணிக்கையிலான ஆசிரியர்கள் விண்ணப்பித்துள்ளனர் எனவும், அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்படும் போது, அனைத்து கொடுப்பனவுகள் தொடர்பிலும் அவர்களுக்கு அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 30.12.2023




இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். சில விஷயங்களில் விட்டுக்கொடுத்து செல்வது கூட உங்களுக்கு மன உளைச்சலைத் தரும்.

இன்று பணிகள் கடினமாக காணப்படும். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. தவறுகள் நேராமல் இருப்பதற்கு சிறிது கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் சில ஈகோ பிரச்சினைகளை சந்திக்க நேரும். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நலம்.

வீட்டை பராமரிக்கும் அல்லது புதுப்பிக்கும் வகையில் செலவினங்கள் ஏற்படலாம். தேவையற்ற செலவுகளும் ஏற்படலாம்.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரும்.




இன்று உங்கள் வளர்ச்சிக்கு உகந்த நாள். மகிழ்ச்சியான புது அனுபவங்கள் உங்களுக்கு காத்திருக்கின்றது.

பணியில் காணப்படும் வளர்ச்சி உங்களை மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் வைத்திருக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பேசுவதற்கான நேரம். இதனால் நல்ல புரிந்துணர்வை பராமரிக்க முடியும்.

இன்று நீங்கள் விரும்பும் வகையில் பணம் செலவு செய்யும் அளவில் சுதந்திரம் காணப்படும். நீங்கள் பயனுள்ள வகையில் பணத்தை செலவு செய்வீர்கள்.

அமைதியான அணுகுமுறையை மேற்கொள்ளவும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




ஆன்மீகம் சம்பந்தப்பட்ட பயணங்களுக்கு இன்றைய நாள் சிறந்தது. உங்கள் வளர்ச்சி குறித்து கவலைப் படுவீர்கள். பொறுமையாக இருப்பதன் மூலம் நீங்கள் நினைத்தது நடக்கும்.

பணியிடத்தில் சில மன உளைச்சல்கள் காணப்படும். பணியில் கூடுதல் சுமைகளை சுமக்க நேரும்.

உங்கள் துணையுடன் உங்கள் உணர்வுகளை கவனமாக பகிர்ந்து கொள்ளுங்கள். இன்று அமைதியாகவும் பொறுமையாகவும் இருப்பது நல்லது.

இன்று நிதி வளர்ச்சிக்கு உகந்த நாள் அல்ல. நீங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

உங்கள் தந்தையின் உடல் நலம் குறித்த செலவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று உணர்ச்சிவசப்படுவீர்கள். பாதுகாப்பற்ற உணர்வு காணப்படும். இன்றைய நாள் மகிழ்ச்சிகரமானதாக இருக்காது. உங்கள் வளர்ச்சி பற்றி கவலைப்படுவீர்கள்.

பணிகளைக் கையாளும் போது பொறுமை இழப்பீர்கள். இதனால் தவறுகள் ஏற்படும். எனவே கவனமாக பணியாற்றவும்.

உங்கள் மனதில் குழப்பமான உணர்வுகள் காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். நீங்கள் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பது நல்லது.

பணத்திற்கான சிக்கல்கள் ஏற்படும் வாய்ப்பு உள்ளது. கடன்கள் ஏற்படும் வாய்ப்பும் அதிகமாக காணப்படுகின்றது.

தொண்டை எரிச்சல் மற்றும் தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது.




நீங்கள் கடினமாக உழைத்து பலனை எதிர்பார்க்க வேண்டும். பாடல்கள் கேட்பது திரைப்படம் பார்ப்பது போன்றவற்றின் மூலம் அமைதியடையுங்கள்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக்காது. பணிச்சுமை அதிகமாக காணப்படும்.

உங்கள் துணையுடனான தகவல் பரிமாற்றத்தில் தடைகள் ஏற்படும். நீங்கள் இதனை கவனமாகக் கையாள வேண்டும்.

பண இழப்பிற்கான வாய்ப்பு காணப்படுகின்றது. இதனை கண்காணிக்க வேண்டியது அவசியம்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். கால் வலி மற்றும் தோல் எரிச்சல் போன்ற பாதிப்புகளால் அவதிப்படுவீர்கள்.




இன்று நீங்கள் புதியதொரு வளர்ச்சியை நோக்கி முன்னேறுவீர்கள். சிறப்பாக திட்டமிடுதல் மற்றும் தொழில் சார்ந்த அணுகுமுறை மூலம் வெற்றி காணலாம்.

பணியில் பெயரையும் புகழையும் சம்பாதிப்பீர்கள். பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும்.

உங்கள் துணையுடன் அன்பை வெளிப்படுத்தி மகிழ சாத்தியம் உள்ளது. இதனால் ஒருவரையொருவர் புரிந்துகொள்ளும் வாய்ப்புள்ளது.

பண வரவு அதிகமாக காணப்படுகின்றது. உங்கள் சேமிப்பு உயரும்.

இன்று உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.




இன்று பயணங்கள் காணப்படுகின்றன. யதார்த்தமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது. இசை விழாக்களில் பங்கு கொள்வது ஆறுதலைத் தரும்.

முறையான திட்டமிட்டு நேரத்தோடு செயல்பட்டால் எளிதாக பணியாற்றலாம்.

உறவில் கோபதாபங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் துணையிடம் கவனமாகப் பழகுங்கள்.

பணபுழக்கம் மகிழ்ச்சிகரமானதாக காணப்படாது. இழப்புகள் ஏற்படாமல் இருக்க பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது.




உங்கள் உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் கண்காணிக்க வேண்டும். நேர்மறையான அணுகுமுறை வெற்றியை அளிக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். இன்று பணியின் போது சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டும். மேலதிகாரிகள் ஆதரவு அவ்வளவாக காணப்படாது.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் கவனமாக வெளிப்படுத்துங்கள்.

பணப்புழக்கம் இன்று குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகள் உங்களை வருத்தத்திற்குள்ளாக்கும்.

மன உளைச்சல் காரணமாக ஆரோக்கிய பாதிப்பு ஏற்படும். தூக்கமின்மை காணப்படும். தோல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 30.12.2023



தனுசு

இன்று சில சவால்களை சந்திக்க நேரும். என்றாலும் அதுவும் உங்களுக்கு நல்லது.

இன்று பணிகளைக் கையாளும் போது கவனம் தேவை. இன்று பணிச் சுமை காணப்படும். நீங்கள் அதனை சாமர்த்தியமாகக் கையாள வேண்டும்.

உங்கள் உறவில் பாதுகாப்பற்ற உணர்வு காணப்படும். இதனை சரி செய்தால் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

நிதியைப் பொறுத்தவரை ஏற்றத்தாழ்வு காணப்படும். பணத்தைக் கையாளும்போது கவனம் தேவை.

இன்று குளிர்ந்த உணவுகளை தவிர்க்க வேண்டும்.



மகரம்

உங்கள் முயற்சியும் தன்னம்பிக்கையும் வெற்றியையும் மகிழ்ச்சியையும் அளிக்கும்.

இன்று அதிர்ஷ்டம் உங்களைப் பார்த்து புன்னகை பூக்கும். உங்கள் முயற்சிகள் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

குடும்பத்தில் அன்பு மிகுந்து காணப்படும். உங்கள் துணையுடன் ஒற்றுமையாக பகிர்ந்து மகிழ்வீர்கள்.

இன்று நிதிநிலை சுதந்திரமாக காணப்படும். உங்கள் சேமிப்பு ஆற்றல் உயரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாகக் காணப்படும்.



கும்பம்

இன்றைய நாளை உங்கள் சுய வளர்ச்சிக்கு பயன்படுத்தலாம். நேர்மையான முயற்சிகளால் விரும்பும் பலன்களை அடையலாம்.

பணியிடத்தில் நல்ல வளர்ச்சி காணப்படும். உங்கள் முயற்சியின் மூலம் நல்ல பெயரையும் புகழையும் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சுமுகமான உறவை பராமரிப்பீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

உங்களின் செலவிற்கான பணம்உங்களுக்கு கிடைக்கும். மங்களகரமான நிகழ்சிகளுக்கு பணம் செலவு செய்வீர்கள்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தலைவலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.



மீனம்

இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். அமைதியுடனும் தன்னம்பிக்கையுடனும் இருங்கள்.

பணியிடத்தில் வளர்ச்சி குறைந்து காணப்படும். பணிகளைக் கையாளும்போது கவனம் தேவை.

நீங்கள் சிறிது குழம்பி காணப்படுவீர்கள். இதனை உங்கள் துணையிடம் காண்பிப்பீர்கள். இதனால் உறவில் சில அசௌகரியங்கள் ஏற்படும்.

இன்று பண வரவுக்குச் சாதகமான நாள் அல்ல. இன்று பணம் குறைந்த அளவில் காணப்படும்.

ஜீரணம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES | KELSEY HOMES 40 Years Housing Excellence

+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA | No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park

வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581

077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park





# ஸ்ரீலங்கன் விமான நிறுவன விற்பனை: விண்ணப்பிக்கும் காலம் மீளவும் நீடிப்பு

ஸ்ரீலங்கன் விமான நிறுவன கொள்வனவு தொடர்பாக முதலீட்டாளர்களின் யோசனையை பொற்றுக்கொள்வதற்கான கால அவகாசம் இரண்டாவது தடவையாகவும் நீடிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதி வரை கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது என துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து, விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் கே.டி.எஸ். ருவன்சந்த்ர தெரிவித்துள்ளார்.

முன்னதாக, டிசம்பர் மாதத்துடன் நிறைவடையவிருந்த கால அவகாசம், ஜனவரி 08 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது.

பலருக்கு வாய்ப்பளிக்கும் வகையில், முதலீட்டாளர்களிடமிருந்து யோசனைகளை பெற்றுக்கொள்வதற்கான கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது என அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.




# நீர்க் கட்டண நிலுவை 1,200 கோடி ரூபாவாம்!

நீர்க் கட்டணம் செலுத்துபவர்களின் எண்ணிக்கை 15 வீதத்தால் குறைவடைந்துள்ளது என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது

இதனால், நீர் கட்டண நிலுவைத் தொகை சுமார் 1,200 கோடி ரூபாவாக உள்ளதாக சபையின் பிரதிப் பொது முகாமையாளர் பியால் பத்மநாத கஜதீரஆராச்சி தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், நீர்க் கட்டணத்தை உடனுக்குடன் செலுத்துவதன் மூலம் நீர் இணைப்பு துண்டிக்கப்படுவதை தவிர்த்துக்கொள்ள முடியும் என அவர் அறிவித்துள்ளார்.

# மது வகைகளின் விலைகள் நாளை மறுதினம் உயரும்!



ஜனவரி முதலாம் திகதி முதல் பெறுமதி சேர் வரி அதிகரிக்கப்படுவதால், தமது மதுபான வகைகளின் விலையை அதிகரிக்கவுள்ளதாக DCSL எனப்படும் வடிசாலை நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன் பிரகாரம், 750 மில்லிலிட்டர் மதுபான போத்தலொன்றின் விலை 90 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது.

375 மில்லிலிட்டர் மதுபான போத்தலொன்றின் விலை 50 ரூபாவாலும், 180 மில்லிலிட்டர் மதுபான போத்தலொன்றின் விலை 20 ரூபாவினாலும் அதிகரிக்கப்படவுள்ளன.

# காணிச் சீர்திருத்த ஆணைக்குழு வடக்குப் பணிப்பாளராக விமலன்

## மீண்டும் அப்பதவிக்கு நியமனம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.30

காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவின் வடக்கு மாகாண அலுவலகப் பணிப்பாளராக மீண்டும் தில்லயம்பலவாணர் விமலன் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாணத்திற்கான பணிப்பாளராக கடமையாற்றிய சமயம் 2023-01-23 முதல் அவர் கொழும்பிற்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார்.

மீண்டும் அவர் 2024-01-01 முதல் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் வடக்கு மாகாண அலுவலகத்தின் பணிப்பாளராக இடமாற்றப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாண காணிச் சீர்திருத்த ஆணைக்குழு அலுவலகம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் இயங்குவது குறிப்பிடத்தக்கது.




# கடந்த 12 நாள்களாக முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனையில் 17,837 பேர் கைது

நாடு முழுவதும் கடந்த 12 நாள்களாக முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கைகளில் இதுவரையில் 17 ஆயிரத்து 837 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதில் 850 பேர் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர் எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பில் 186 சந்தேக நபர்களுக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், போதைப்பொருளுக்கு அடிமையான 1,187 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேநேரம், பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பணியகம் மற்றும் விசேட பணியகத்தினால் பெயரிடப்பட்டுள்ள 4 ஆயிரத்து 665 சந்தேக நபர்களில் இதுவரையில், 1,375 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், 10 கிலோ கிராமும் 510 கிராம் ஹெரோயின், 6 கிலோகிராம் ஐஸ் ரக போதைப்பொருள், 288 கிலோகிராம் கஞ்சா, 21 லட்சத்து 10 ஆயிரத்து 500 கஞ்சா செடிகள் மற்றும் 71 ஆயிரத்து 271 போதை மாத்திரைகள் இந்த விசேட சோதனை நடவடிக்கைகளின் போது பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, கைதுசெய்யப்பட்ட போதைப்பொருள் வர்த்தகர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பல கோடி பெறுமதியான சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பில், பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.




# ஓட்டோக் கட்டணங்கள் உயர்த்தப்படும் சாத்தியம்

பெறுமதி சேர் வரி 18 சதவீதமாக அதிகரித்த பின்னர் எரிபொருள்களின் விலை அதிகரிக்குமானால் ஓட்டோக் கட்டணங்கள் அதிகரிக்கப்படும் என அகில இலங்கை ஓட்டோச் சாரதிகளின் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இந்த சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேகர தெரிவிக்கையில் –


"ஜனவரி மாதம் முதல் எரிபொருள்களின் விலை 50 ரூபாவிற்கும் அதிகமாக உயர வாய்ப்பு உள்ளது. இவ்வாறு இடம்பெற்றால் எரிபொருள்களின் விலைக்கு ஏற்ப கிலோ மீற்றருக்கான கட்டணம் அதிகரிக்கப்படும்.

எரிபொருள்களின் விலை அதிகரித்த சந்தர்ப்பங்களில் எமது சங்கம் கட்டணங்கள் தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால் இம்முறை நாம் எரிபொருள்களின் விலைக்கு ஏற்ப கட்டணத்தை அதிகரிக்க தீர்மானம் எடுத்துள்ளோம்" – என்றார்.

# 25 வீதமான பயணிகள் ரயிலில் ஓஸிப் பயணம்

## ‘வித்தவுட் டிக்கெட்’டால் தினசரி 3 கோடி ரூபா இழப்பு;

## அதனால் தண்டப் பணம் ரூ. 10 ஆயிரமாக அதிகரிப்பு!



“ரயில் சேவையெொ பயன்படுத்தும் பயணிகளில் 25 சதவீதமானோர் பயணச்சீட்டு பெறாமல் பயணம் செய்கிறார்கள். ஆகவே பயணச்சீட்டு இல்லாமல் பயணிப்பவர்களிடமிருந்து அறவிடப்படும் தண்டப்பணத்தை 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.”

– இவ்வாறு ரயில்வேத் திணைக்களத்தின் பொது முகாமையாளர் எச்.எம்.சி. பண்டார தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“அடுத்த ஆண்டு முதல் தனியார் துறையினரது ஒத்துழைப்புடன் ரயில் நிலையங்கள் அபிவிருத்தி செய்யப்படும். ரயில்வேத் திணைக்களத்துக்கு சொந்தமான காணிகள் சட்டவிரோதமான முறையில் குடியிருப்பவர்களிடமிருந்து வரி அறவிடுவதற்குப் புதிய வழிமுறை ஒன்று செயற்படுத்தப்படும்.

ரயில் சேவையைப் பயன்படுத்தும் பயணிகளில் 25 சதவீதமானோர் பயணச்சீட்டு பெறாமல் திருட்டுத்தனமான முறையில் பயணிக்கிறார்கள். இதனால் ரயில்வேத் திணைக்களம் நாளாந்தம் சுமார் மூன்று கோடி ரூபா வருமானத்தை இழக்கிறது. ஆகவே பயணச்சீட்டு இல்லாமல் பயணிப்பவர்களிடமிருந்து அறவிடும் தண்டப்பணத்தை 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து மேலதிகமாக 20 ரயிக் என்ஜின்களைக் கொள்வனவு செய்ய பேச்சு முன்னெடுக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு முதல் ரயில் சேவையை வினைத்திறனான முறையில் முன்னெடுக்க முடியும்”– என்றார்.